UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education Ordinary Level

**TAMIL** **3206/02**

Paper 2 Translation and Reading Comprehension

May/June 2004

**1 hour 30 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen on both sides of the paper.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer **all** questions.
The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.
At the end of the examination, fasten all your work securely together.

This document consists of **4** printed pages.

SP (CW/TL) S70248/2
© UCLES 2004

UNIVERSITY of CAMBRIDGE International Examinations

## Section A – Translation

**1** Translate into **English**.

வெயில் காலத்தில் ஒரு நாள் ஒரு விவசாயி தன் வேலைகளைச் செய்வதற்காகக் காலையில் சீக்கிரம் எழுந்தான். காலையில் சாப்பிட்ட பிறகு அவன் வயலை நோக்கிப் போனான்.

மற்ற மிருகங்கள் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்ப்பதற்கு முன்னால் பசுக்களின் பாலைக் கறக்க வேண்டும்.

அவன் தெருவைத் தாண்டும்போது தூரத்தில் ஒரு ஆடு தனியாக நிற்பதைக் கண்டான்.

அவன் நினைத்தான் "ஐயையோ, என் மகன் நேற்று மாலை வயலில் விளையாடிவிட்டு கதவை மூட மறந்து போயிருக்கிறான்.

வேறு ஏதாவது மிருகங்கள் தப்பி ஓடி விட்டதா என்று பார்க்கக் கவலையுடன் வயலைப் பார்த்து ஓட ஆரம்பித்தான். [10]

**2** Translate into **Tamil**.

The Veddhas are one of the most ancient people living on earth. We do not know how long ago they crossed the sea to Sri Lanka. Until about 4000 years ago, they lived in all parts of the island. Now, they live mainly in south-eastern Sri Lanka. The borders of their domain are formed by the Uva and Magam Patu districts in the south, the hilly country in the west and south-west and the Mahawali Ganga in the north.

The Veddhas rarely leave the lovely jungle, where they hunt animals and gather food from the forest. If they leave their domain, they do so to exchange meat for tools and other goods.

The Veddhas are proud of their heritage and call themselves Vanniyalette, which means "Those of the Forest". [20]

© UCLES 2004

## Section B – Comprehension

Do not translate the passage below. First, read it carefully and then answer, briefly and in **Tamil**, questions that follow.

ஜெவ்ரி பாவா இலங்கையின் முக்கியமான சிற்பிகளில் ஒருவர். அவருடைய பெயர் உலகம் முழுவதும் பிரசித்தம். அவர் இலங்கையில் 1919 ம் ஆண்டு பிறந்தார். 1938 ம் ஆண்டு சட்டம் படிப்பதற்காக இங்கிலாந்து வந்தார். 1946 ம் ஆண்டு திரும்பவும் இலங்கைக்கு வந்து சட்டஅலுவலகத்தில் வேலை பார்த்தார். ஆனால் அதிக நாட்கள் வேலை செய்யவில்லை. இவர் சீக்கிரத்தில் தன் வேலையை விட்டு விட்டு, இரண்டு வருடங்களுக்கு உலகம் முழுவதும் சுற்றினார். பிறகு கட்டடக்கலை படிப்பதற்காகத் திரும்பவும் இலண்டன் வந்தார். 1957 ம் ஆண்டு, தன்னுடைய முப்பத்தியெட்டாவது வயதில் படிப்பை முடித்தார்.

கொழும்பில் சிற்பியாக வேலை பார்க்க ஆரம்பித்தார். பாவா எல்லாவிதமான கட்டடங்களும் எப்படி இருக்கவேண்டுமென்று படம் வரைந்தார். அவருடைய முதல் கட்டடம் மேற்கத்திய முறையிலும் நவீனமாகவும் இருந்தன. பிறகு அவருக்கு இலங்கையின் பரம்பரை வழக்கங்களிலும், அங்கு கிடைக்கும் கட்டடம் கட்டும் பொருள்களிலும் விருப்பம் வந்தது. அதனால், அவர் அவருடைய கட்டடங்களில் பரம்பரை சிற்பங்களும் தற்காலத்தில் வந்த சிற்பங்களும் கலந்து இருந்தன.

இலங்கையின் இயற்கைக் காட்சிகள் இவர் மனத்தை மிகவும் கவர்ந்து, அதை பயன்படுத்த விரும்பினார். சூடு அதிகம் உள்ள இடத்தில் வளரும் தாவரவகைகள் பாவாவின் மனத்தை மிகவும் கவர்ந்தன. அதை அவர் தன் கட்டடங்களில் சிற்பமாகச் செய்தார். வீடுகளில் குடியிருக்கும் மக்கள் வெளியே இருக்கும் இயற்கைக் காட்சிகளைப் பார்ப்பதற்காகத் தன் கட்டடங்களில் பெரிய ஜன்னல்களையும் திறப்பிடங்களையும் வைத்தார்.

அவர் 1961 ம் ஆண்டு முதலில் கட்டிய வீடு ஒன்று கொழும்பில் இருந்தது. அங்கே நடுவில் பச்சை வர்ணத்தில் ஒரு முற்றம் இருந்தது. எல்லா அறைகளின் ஜன்னல்களும் முற்றத்தை பார்க்கும் விதத்தில் உட்பக்கம் இருந்தன. சுறுசுறுப்பும் சத்தமும் உள்ள நகரத்தின் நடுவில் இந்த வீடு அமைதி கொடுக்கும் இடம் மாதிரி இருந்தது. சூடு அதிகமுள்ள நகரத்தில் எப்படி வேலை செய்யவும் வசிக்கவும் வேண்டும் என்பதற்கு இந்த வீடு எடுத்துக்காட்டாக இருந்தது.

1970 ம் ஆண்டு இவர் பென்டோட்டா ஹோட்டலைக் கட்டினார். இங்கு யாத்திரிகர்களுக்கு வேண்டிய தற்கால வசதிகள் எல்லாம் இருந்தன. அதற்குப் பிறகு வந்த பல கட்டடங்களுக்கு இந்த ஹோட்டல் கட்டடம் வழிகாட்டியாக அமைந்தது. 1979ம் ஆண்டு பாவாவின் வளரும் வெற்றிகளை அறிந்து, அவரை புதிய சட்டசபைக் கட்டடம் அமைக்க திட்டம் போடக் கேட்டனர்.

பாவாவின் பல கட்டடங்கள் (சட்டசபை, கல்லூரி, ஹோட்டல்) பெரிதாக இருந்தபடியாலும், சாதாரண மக்களுக்கு அவைகளுடன் தொடர்பு இல்லாதபடியாலும் அவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்று சிலர் நினைத்தனர். ஆனால் அவருடைய கட்டடங்கள் மூலம் இலங்கையின் மறைந்து போன கலாசாரங்களைப் பற்றி மக்கள் தெரிந்து கொள்கின்றனர் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர். சுதந்திர இலங்கையில் அவருடைய சிற்பக்கலை மிகவும் சக்தி உள்ளதாக இருக்கிறது. புதிதாக வரும் இளைய சமுதாயத்திற்கும் இவருடைய சிற்பக்கலை வழிகாட்டியாக இருக்கிறது.

கேள்விகள்

1 ஜெவ்ரி பாவா எதில் பிரசித்தமாக இருந்தார்? [1]

2 முதலில் அவர் ஏன் இங்கிலாந்து போனார்? [1]

3 இவருடைய முதல் வேலை என்ன? [1]

4 முதல் வேலை இவருக்குப் பிடித்ததா? உன் பதிலை விவரமாக எழுது. [2]

5 இவர் எங்கே சிற்பக்கலை பயின்றார்? [1]

6 அவர் 38 வயதில் படித்து முடித்தார். இது ஏன் அசாதாரணமாக உள்ளது [2]

7 அவர் எந்த விதமான கட்டடக்கலையில் திறமை பெற்றார்? [1]

8 ஆரம்பத்தில் அவர் கட்டிய கட்டடங்கள் பார்ப்பதற்கு எப்படியிருந்தன? [1]

9 எதனால் அவருடைய வேலையில் மாற்றம் இருந்தது? [2]

10 இலங்கையில் அவருக்கு மிகவும் பிடித்தது என்ன? [1]

11 பாவாவின் வீடுகளில் ஏன் பெரிய ஜன்னல்களும் திறப்பிடங்களும் இருந்தன? இரண்டு காரணங்கள் கூறவும். [2]

12 "சுறுசுறுப்பும் சத்தமும் உள்ள நகரத்தின் நடுவில் இந்த வீடு அமைதி கொடுக்கும் இடம்" இதனால் உனக்கு என்ன விளங்குகிறது? [3]

13 பென்டோட்டா ஹோட்டல் கட்டிய பிறகு அவருக்குப் பெரிய வெற்றி கிடைத்தது என்பது நமக்கு எப்படித் தெரிய வருகிறது? [2]

14 "பாவாவின் வேலைகள், கட்டடங்கள் சாதாரண மக்களுக்கு அதிகம் பயன்படுவது இல்லை" என்று இந்தக் கட்டுரை கூறுவதாக நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள்? [3]

15 பாவாவின் கட்டடங்களில் இருந்து இலங்கையில் உள்ள சாதாரண மக்களுக்கு என்ன விதமான பயன்கள் கிடைக்கின்றன? [2]

[Total : 25]